தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1974 ஏப்ரல் 25.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. அரசின் தீர்மானங்கள்.

(1) வினா நேரம் கைவிடப்படுதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 22-வது விதியின்படி கேள்வி நேரம் இன்று கைவிடப்படலாம்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியையொட்டி, 1974–75–ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை: "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியையொட்டி, 1974–75–ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின் 2 (1) ஒழுங்கு முறை விதிக்கிணங்க, 1974–75–ஆம் நிதியாண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் என்று மேலவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியமனப்படிவங்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும்—26—4—1974 மாலை 5 மணி.

நியமனப்படிவங்களைச் சரிபார்ப்பதற்கான நாளும் நேரமும்—26—4—1974 மாலை 6 மணி.

நியமனப்படிவங்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும்—27—4—1974 மாலை 5 மணி.

நியமனப்படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் எதுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(3) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மேலவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியை யொட்டி 1974–75 ஆம் நிதி ஆண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை: "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி, 1974–75 ஆம் நிதி ஆண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்கு முறை விதியின் 2 (1) ஒழுங்கு முறை விதிக்கிணங்க, 1974–75 ஆம் நிதியாண்டிற்கான அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு, கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை வரையறுக்கிறேன் என்று மேலவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியமனப்படிவங்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும்—26—4—1974 மாலை 5 மணி.

நியமனப்படிவங்களைச் சரிபார்ப்பதற்கான நாளும் நேரமும்—26—4—1974 மாலை 6 மணி.

நியமனப்படிவங்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும்—27—4—1974 மாலை 5 மணி.

நியமனப்படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் எதுமிருப்பின், வாக்குப்பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.